CMG JAFFNA

# துளிர்

வளர்ச்சி - 02 ஆனி - 2003 பிறப்பு - 06



## வெளிநாட்டில் மாணவர்கள் கணனியை உபயோகித்து இலகுவாக கல்வி கற்கிறார்களாமே !!



வெளியீடு:
சிறுவர் ஊடகத்துறை
அன்பளிப்பு - 10.00



படத்தில் உள்ள குடியானவனின் நிலைமையை வெளிப்படுத்தி நீங்கள் கதை, சிறுகதை, சிந்தனைகள், எழுதி முயற்சி செய்யுங்கள் அத்தோடு அவற்றை எமக்கு அனுப்புங்கள் அவை அடுத்த இதழில் பிரசுரமாகும்.

மாறிவரும் கற்பித்தல் முறை பற்றி நீங்கள் அறிந்தவற்றை எமக்கு எழுதி அனுப்புங்கள். அடுத்த இதழில் கற்பித்தலில் கணனி சிறப்பு கட்டுரைகள் இடம் பெறும்.

# பதிப்பாசிரியரின் பேனாவிலிருந்து.......

சிறுவர்களது பிரச்சினைகளை சிறுவர்களே இனம்கண்டு அதற்குரிய தீர்வுகளை பெரியவர்கள் முன்வைக்கும் "சிறுவர் செயற்பாட்டிற்கான அழைப்பு" எனும் அண்மையில் நடைபெற்ற நிகழ்வானது ஒரு புறம் மகிழ்ச்சியையும் மறுபுறம் வேதனையையும் முகிழ வைக்கின்றது.

ஏனனில் இந்த நிகழ்வை அதிகமான பெரியவர்கள் புறக்கணித்திருப்பது கண்கூடான விடயமாகும். இதன்மூலம் பெரியவர்கள் என்று தங்கள் முகத்துக்கு நேரே முகவரி கட்டிக் கொண்டு திரிகின்றவர்களின் முகமூடித் திரைகளை க் கிழித்தெறிய முடிந்திருக்கின்றது. சிறுவர்களின் நலனில் அக்கறைகொண்டவர்கள்போல்"அக்கரையில்" உள்ளவர்களுக்குப் பாசாங்கு பண்ணும் பச்சோந்தித் தனங்களையும் புரிந்து கொள்ள முடிந்திருக்கின்றது.

சிறுவர்கள் எல்லோரும் தங்கள்,தங்கள் பிள்ளைகள் என்பதையும் நாளைய தலைவர்கள் என்பதையும் புரிந்து கொள்ளாது அல்லது புரிந்து கொண்டாலும், புரியாதது போல் பாசாங்கு காட்டி தமது சிறுமைத்தனங்களுக்குள் மூழ்கிக்கிடந்து,சிறுவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற நினைப்போ,முனைப்போ இல்லாமல் இருப்பது சிறுவர்களாகிய எமக்கு சங்கடம் தரும் சங்கதிகளாக மாறிவருவதை எங்ஙனம் நாம் ஏற்றுக் கொள்வது?
இதைப் பெரியவர்கள் புரிந்து கொள்ளும் காலம் தான் எப்பொழுது? "செவிடன் காதில் ஊதிய சங்காக" எம் கோரிக்கைகளெல்லாம் காற்றிலே கலந்து போவதற்காகவா நாங்கள் பல செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம்.

இவ்வாறான எங்கள் ஆதங்கங்களை புரிந்து கொண்டு ஆதரவு தருவதற்கு அனைத்துத்தரப்பினரும் ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும் என்பதனைத் தங்களுக்கு கோரிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். மீண்டும் அடுத்த துளிரில் சந்திக்கும் வரை.........

அன்புடன்
ஆசிரியர்.

**சிறுவர் ஊடகத் துறை**

தலைவர்
எஸ்.ஹரன்

உப தலைவர்
கே.ரஜித்தா

செயலாளர்
ரி.பிரகாசினி

உப செயலாளர்
ரி.நவரட்ணம்

பொருளாளர்
யு.சங்கர் ஆனந்

ஆசிரியர்
ரி.அஜந்தகுமார்

காப்பாளர்
கே.கலைச்செல்வன்
எஸ்.சிவறாஜினி

உறுப்பினர்
ஆர்.நளாயினி
ஆர்.மேரிஉஷா
எஸ்.றொபின்சன்

"துளிர்"
சிறுவர் ஊடகத்துறை
18,குமாரசுவாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**நாளைய நல்லுலகின் இன்றைய நல்வரவு**

# சிறுவர் ஊடகத்துறை வாசகர் வட்டம்

அன்பான சகோதர சகோதரிகளே கீழ் காணப்படும் அங்கத்துவ விண்ணப்படிவத்தை பூர்த்தி செய்து சிறுவர் ஊடகத்துறை வாசகர் வட்டத்தின் உறுப்பினராக நீங்கள் இணைந்து கொள்ளுங்கள்

துளிர் சஞ்சிகையானது, சிறுவர்களுக்காக சிறுவர்களினால் நடாத்தப்படும் ஒரு சஞ்சிகை. இதில் நீங்கள் இணைவதன் மூலம் எங்களது உரிமைகள் பற்றியும் அறிந்து கொள்வதுடன் எங்களது ஆற்றல்களுக்கு ஒரு களமாகவும் அமையும் என்பது உறுதி.

ஆசிரியர்.

### அங்கத்துவ விண்ணப்படிவம்

பெயர்:..................................
..................................

வயது:..................................

பாடசாலை:..................................
..................................
..................................

முகவரி:..................................
..................................
..................................
..................................

பொழுது போக்கு..................................
..................................
..................................
..................................

புகைப்படம்

## வருங்காலச் சிறுவர்களே

சிறுவர் உரிமை இருக்கும் வரைக்கும்
சிறுவர் பயணம் தூரமில்லை
பிறக்கும் சிறுவர் முளைக்கத்துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை.

துள்ளித்திரியும் சின்னஞ்சிறுவர்களே
பள்ளம் நிரப்ப வாருங்கள்
சோர்ந்து இருக்கும சிறுவர்களை
தட்டிஎழுப்ப வாருங்கள்

சிறுவரை மறந்த உணர்ச்சி என்பது
திரியை மறந்த விளக்காகும்
சிறுவர்களெல்லாம் மூடர்களல்ல
சிறுவர்கள்மீது கொடிய
செயலைதூவாதீர்கள்

சிறுவர் நீங்கள் ஒன்று சேர்ந்தால்
சிறந்த வாழ்வைப் பெற்றிடுவீர்
அச்சம் இன்றி வாழ்ந்திடுவீர்கள்
எம் வருங்காலச் சிறுவர்களே.



# இலங்கைச் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

கடந்த இருதசாப்தங்களாக நடைபெற்ற கொடூர யுத்தத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்களே! இந்தயுத்தத்தினால் ஏறக்குறைய 20000 சிறுவர்கள் ஏதோரு வகையில் பாதிக்கப்பட்டு ள்ளார்கள். குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்திலேதான் கூடுதலாக இவ் அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

இவ்யுத்தத்தினால் பல்லாயிரம் சிறுவர்கள் தமது அவயவங்களை இழந்து துள்ளிக்குதிக்கும் பிஞ்சு உள்ளங்கள் இன்று ஏங்கி நிற்கின்றனர். உயிரைப்பறிக்கும் இவ் ஆயுதங்களிற்கு எத்தனை வடிவங்கள்?. இன்றைய சிறுவர்கள் தான் நாளை நாட்டின் தலைவர்கள். என்று ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை சமவாயம் கூறுகின்றது. பல்வேறு நாடுகளில் சிறுவர்களைக் கொண்டு தகாத செயல்களை செய்விப்பதையும் சிறிய கொரில்லா அமைப்புகளுக்கு சிறுவர்களை இணைத்தமையும்கண்டு, இவையெல்லாம் சிறுவர்களின் மீது மேற்கொள்ளப்படும் துஸ்பிரயோகம் என கண்டனத்தையும் தெரிவித்ததோடு இதனை தடுப்பதற்காக ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் உதயமானது. இவ்வமைப்பானது சிறுவர்களிற்கு 40 உரிமைகளையும் நான்கு விடயங்களிற்குள் உள்ளடக்கியிருந்தது.

சிறுவர்களிற்கு உரிமைகள் கொடுக்க வேண்டுமென குரல் கொடுத்தவர் "எக்லைன்ட் ஜெப்'' என்ற பெண்மணி ஆவார். இதனைக்கருத்திற் கொண்டு சிறுவர் உரிமைபற்றிய சமவாயம் வரையப்பட்டது. இதை ஐ.நா.சபை அங்கீகரித்தது.


இவையெல்லாம் சர்வதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் சில நாடுகளில் சிறுவர் மீதான துஸ்பிரயோகம் அதிகமாகக் காணப்பட்டது.

குறிப்பாக இலங்கையில் உள்நாட்டு யுத்தத்துடன் ஆரம்பமாகியது எனலாம். இலங்கை இராணுவத்தினால் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தசிறுவர், சிறுமியர் கொடூரமாக பாலியல் வன்முறைகளால் கொல்லப்பட்டுள்ளனர். நாட்டின் இறைமை யையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டியவர்கள் இவர்களே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். வடகிழக்கில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையின் எதிரொலியாக சிறுவர்கள் ஆயுதமேந்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். இவற்றையெல்லாம் இலங்கை அரசு சர்வ தேசத்திடம் மூடி மறைத்தது.

அத்தோடு சிறுவரின் வாழ்க்கையின் ஆரம்ப அடித்தளமான கல்வியின் மீதும் குறிவைக்கப்பட்டது. சிறுவர்களிற்கு வந்து சேரவேண்டிய நூல்களையெல்லாம் குறைந்தளவுடன் தடை செய்தனர். இதனால் சிறுவரின் வாழ்வே பாழடைந்த நிலைக்கானது. சிறுபான்மையினச் சிறுவர்களென்றால் அவர்கள் பங்குபற்ற வேண்டிய நிகழ்ச்சிகளில் அவர்களைப் புறக்கணித்தல் போன்ற செயற்பாடுகள் சிறுவர்மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை களாகும். சிறுவர்களின் உரிமைகளை மீறும் செயற்பாடுகள் அண்மைக்காலமாக அதிகரித்து வந்துள்ளது. சிறுவர்களைக் கடத்தல், இயக்க அமைப்புகளிற்கு கட்டாயமாக கூட்டிச் செல்லல்,

தொடர்ச்சி..14ம் பக்கம்

# சிறுவர் செயற்பாட்டிக்கான அழைப்பு



சிறுவர் பாதுகாப்பு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் அனுசரனையுடன் யாழ் மாவட்ட சிறுவர் ஊடகத் துறைக் குழுவினர் 07.06.2002 அன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சிறுவர் செயற்பாட்டிற்கான அழைப்பு எனும் நிகழ்வு நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ் மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகப் பிரிவிலும் உள்ள



மத்திய கல்லூரியில் நடைபெற்ற பட்டறையில் தாம் எதிர் நோக்கும் பிரச்சனைகளை இனம் காணும் சிறுவர்கள்

பிள்ளைகளின் பிரச்சினைகள் சிறுவர்கள் மூலமாகவே இனம் கண்டு அவர்களே அதற்கான தீர்வையும் முன் வைத்தனர். இது சம்மந்தமாக 29,30/5/ 2003ம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் ஆயத்தப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. அதில் முக்கியமான பிரச்சனைகளாக

1. கல்வி
2. சிறுவர் துஷ்பிரயோகம்
3. சுகாதாரம் போசாக்கு

மூன்று பிரச்சினைகள் பிள்ளைகளால் முன்வைக்கப்பட்டது. இதற்கான தீர்வுகளையும் இனம் காண்பதற்காக இந்த சிறுவர் செயற்பாட்டிற்கான அழைப்பு எனும் நிகழ்விற்கு அழைத்து அந்த நிகழ்விலே சிறுவர்கள் தமது பிரச்சனைகளை, நாடகம் உரையாடல் மூலம் தெரியப்படுத்தினார்கள். இந் நிகழ்விற்கு வருகை தந்தவர்களில். அமைச்சர் டாக்டர் ஜெயலத்ஜெவத்தனா, யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ந.ரவிராஜ், .எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ் பொலிஸ்திணைகள் உயர் அதிகாரிகள்,சுகாதார திணைக்கள அதிகாரிகள் அரசாங்க




வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சிறுவர் செயற்பாட்டிற்கான நிகழ்வில் தாம் எதிர் நோக்கும் பிரச்சனைகளை விவாதிக்கும் சிறுவர்கள்



வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சிறுவர் செயற்பாட்டிற்கான நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் திரு. ஜெயலத் ஜெயவர்த்தனவும் சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களும்.

அதிபர், கல்வி திணைக்கள அதிகாரிகள், UNHCR, UNICH அதிகாரிகள் யாழ்மாவட்ட நீதவான் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

இவர்கள் மத்தியில் சிறுவர்கள் தங்களது பிரச்சனைகளை முன்வைத்த வேளையில், கல்வித்திணைக்கள அதிகாரிகள் கல்வி சம்பந்தமான பிரச்சனைகளுக்கு தாம் விரைவில் தீர்வை காண்பதாகவும் கல்வி சம்பந்தமாகப் பிரச்சனையை ஏற்படுத்தும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

சுகாதாரம் சம்பந்தமான பிரச்சனைகள் குறித்து கருத்துத் தெரிவித்த சுகாதார திணைக்கள அதிகாரிகள் தமது திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கு சத்துணவு வழங்குவது நிறுத்தப்பட்டு விட்டதென்றும் இந்நிகழ்வில் சிறுவர்களால் முன்வைத்த கோரிக்கையின் படி உண்மையிலேயே போஷாக்கு முக்கியமான ஒன்றுதான் எனவே அத்திட்டத்தினை நாம் மீள நடைமுறைப்படுத்த ஆவன செய்வோம் எனக்கூறினார்கள்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக யாழ்மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா கருத்துத்தெரிவிக்கையில் சிறுவர் இல்லங்களில் நடக்கும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு காரணம் சிறுவர் இல்லங்களில் பெரும்பாலானவை தனியார்கையில் இருப்பதே காரணமாகும். இப்படியான துஷ்பிரயோகங்கள் தொடர்ந்து நடைபெறும் பட்சத்தில் அதற்காக நாம் சட்டதிட்டங்களுக்கு அமைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம் என்றார்.


இந்நிகழ்வில் கலந்து கொண்ட யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தமது கருத்தில் சிறுவர்தொடர்பான பிரச்சனைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துவதுடன் உரிய நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.



அமைச்சருடன் கலந்துரையாடும் சிறுவர்கள்

இந்நிகழ்வின் இறுதியில் கலந்து கொண்ட புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர். ஜெயலத் ஜெயவர்த்தன சிறுவர் பிரச்சனைகள் தொடர்பாக தமது அமைச்சின் முழு ஒத்துழைப்பினையும் தாம் வழங்க தயாராக இருப்பதாகவும் அத்துடன் யாழ் மாவட்ட சிறுவர்களுக்கு பிற மாவட்டங்களைச் சேர்ந்த சிறுவர்களுடன் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்த தாம் ஒழுங்குகளை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

# அம்மன் வருத்தம்
## (பொக்கிளிப்பான்)



இன்றைய யாழ்குடாவில் அண்மைக்காலங்களில் பரவிவருகின்ற ஒரே ஒரு நோய் இந்த அம்மன்நோய் இது மனிதனை முழுமையாக ஆட்டிப்படைக்கும் ஒரு நோயாகும். இது உரையாடல் மூலம் உங்கள் கைகளில்.

பாத்திரம் : ராஜா, செந்தூர்ச்செல்வன்

ராஜா : செந்து, என்ன இப்போதெல்லாம் அம்மன் வருத்தமென்று கூறுகின்றார்களே

செந்து : ஓம் ராஜா எல்லாம் இந்த வெயிலுக்குத்தான்

ராஜா : இதற்கு நாம் என்ன நடவடிக்கை எடுக்கலாம் ? இது எப்படிப்பட்டது ?

செந்து : உனக்கு சற்று கூறத்தான் வேண்டும் வா இந்த நோயின் அறிகுறி. முதலில் பருப்போன்று உருவம் தோன்றும். அப்பொழுது அதை நீங்கள் உடைக்கலாம்.

ராஜா : உடைத்தால் என்ன நடக்கும்?

செந்து : அது மூடி பல பருக்களை உருவாக்கும் பின்பு இது நோவை ஏற்படுத்தும்

ராஜா : அதன் பின்பு

செந்து : அதன்பின்பு வைத்திய உதவியை நாட அவர்கள் இதற்கு மருந்தில்லை என்று கூறுவார்கள்.

ராஜா : அப்ப இதற்கு மருந்து ?

செந்து : இதற்கு இயற்கை மருந்தே பயன்படும் அதாவது பஞ்சு போன்றதில் படுக்கவிடவேண்டும் மரபுப்படி வேப்பமிலை போட்டு குளிர்மைப்படுத்த வேண்டும்.

ராஜா : உணவு

செந்து : உணவாக சவ்வரிசிக் கஞ்சி, இலைக்கறி வகை பொரித்த அரிசி பாயாசம் போன்றவையாகும்.


ராஜா : அது எப்ப மாறும் என்னமாதிரி

செந்து : அது ஒரு கிழமைக்குப் பின்பு குறையும் அப்பொழுது கூட கவனமாக நடத்தல் அவசியம் பின்பு ஏழு தோய்வையும் முடிக்க வேண்டும் முக்கியமாக உறைப்பை நீக்கி சூட்டைக்குறைத்து வரவேண்டும் (நிறுத்த வேண்டும்) ராஜா இதே போன்று தான் கண்நோயும் அதற்கும் இப்படித்தான் மருந்து.

ராஜா : வா் செந்து நேரம் போகுது வீட்டுக்குப் போவோம்

செந்து : சரி போவோம்.

ஆக்கம் - செந்தில் செல்வன்



# தொலைக்காட்சியின் நன்மையும் தீமையும்

இன்றைய உலகு நவீன உலகு. விந்தைகள் புரியும் நவீன உலகு. பழையன கழிந்து புதியன நுழையும் புன்னகை உலகு. இங்கு விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் குட்டிக்கிராமமாக மாறிக்கொண்டிருக்கிறது பூமி. இல்லை இல்லை விந்தை மிகு மனிதர்களால் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆதிகாலத்திலே காட்டிலே மரஞ் செடி கொடிகளில் மறைந்து வாழ்ந்த மனிதன் இப்பொழுது அந்தரத்திலே பறந்து கொண்டிருக்கின்றான். கால கடுகதியில் இவைகள் மாற்றம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அன்று சைகைளால் சம்பாசனை செய்த மனிதன் இன்று படியேறி ஊடகங்கள் மூலம் மொழியைப் பயன்படுத்தி உரையாடுவதைக் காணலாம்.

தகவல் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியின் ஒரு படிநிலையே தொலைக்காட்சியாகும். இத்தொலைக்காட்சியின் பயனாகமனித உலகம் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் சில தீமைகள் இருக்கத்தான் செய்கிறது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல தொலைக்காட்சியிலும் நன்மை தீமைகள் என்று இரு பக்கங்கள் காணத்தான் செய்கிறது. அது அவ்வாறு இருப்பினும் அதனை பயன்படுத்துபவரது ஆற்றலுக்கேற்ப ஒருவரை அதன் நன்மைகள் சென்றடைகின்றன. இன்னொருவரை அதன் தீமைகள் சென்றடைகின்றன. எனவே நன்மைகளைப் பெறுபவர், தொலைக்காட்சி நன்மை விளைவிக்கும் சாதனமே எனப் போராடுவார். தீமைபெறுபவர் தவறை உணர்ந்த போது தொலைக்காட்சி தீமை விளைவிக்கும் சாதனமே எனப் வாதாடுவார். எது எப்படி இருப்பினும் தொலைக்காட்சியில் நன்மை தீமை என்ற இரு வேறு கருத்துக்கள் நிலவுவது உண்மையே.

தொலைக்காட்சியின் பயனாக இன்று உலகின் மூலை முடுக்கில் எங்கும்நடக்கும் செய்தியும் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம், கண்ணால் பார்த்து ரசித்துக் கொள்ளலாம்.

தொலைக்காட்சியின் மூலம் ஒரு மனிதன் தகவல் களஞ்சியத்தை பெற்றுக் கொள்ளலாம். நேரேசென்று பார்த்து அறிய வேண்டிய அவசியமில்லை. தொலைக்காட்சியிலே நடக்கின்ற நாடகங்களைப் பார்ப்பதால் பயனுற்ற ஒருவர் தனது ஓய்வை போக்கிக்கொள்ள முடிகிறது.

பொழுது போக்கு சாதனமாக இருந்த மனிதனுக்கு மன நின்மதியை அழிக்கின்றது. உலகின் பல்வேறு பட்ட தாவரங்கள், பல்லின உயிரினங்கள், ஆறுகள், மலைகள், எரிமலைகள், சிகரங்கள் போன்றவற்றை தொலைக்காட்சி மூலம் நேரிலே பார்த்து தரிசிக்க முடிகிறது. ஒரு நாட்டின்து கலை பண்பாடு கலாச்சார விழுமியங்களை தொலைக்காட்சியிலே பார்த்து அறிய முடிகிறது. சஞ்சல நேரத்திலே மனதில் சந்தோசத்தினை தருகிறது. தனிமையிலே இனிமை காண வழிவகுக்கின்றது. தொலைக்காட்சியிலே ஆயிரந்தான் நன்மை தீமைகள் இருந்தாலும் அதிலே காணப்படுகின்ற சில தீமைகளால் தொலைக்காட்சி சாதனத்திற்கே இழுக்கைத் தேடித் தருகின்றது.

"குடிப்பிறந்தார் கண் விளங்கும் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போலுயர்ந்து"
உயர்ந்த குடியிலே பிறந்தவர்களிடத்து காணப்படுகின்ற சிறிய குற்றமானது ஆகாயத்திலே சந்திரனிடத்தே காணப்படுகின்ற களங்கத்தைப் போல பெரிதாக தென்படும் என பொய்யாமொழிப்புலவர் கூறியுள்ளார். அதேபோல சிறந்த பயன்களைக் கொடுக்கும் தொலைக்



காட்சியிலே காணப்படுகின்ற சிறிய குற்றமானது தீமையானது. ஆகாயத்திலே சந்திரனிடத்தே காணப்படுகின்ற களங்கத்தைப் போல பெரிதாக தென்படும். தொலைக்காட்சியில் பரந்துபட்ட நன்மைகள்காணப்பட்டாலும் விரிந்து பட்ட தீமைகள் சில காணப்படுகின்றன. தொலைக் காட்சியைப் பார்க்கும் எம்மின மக்களிடையே கலாச்சார சீரழிவு ஏற்படுகிறது. தமிழர்களிற்கே உரித்தான தனித்துவக் கலாச்சாரம் சீரழிந்து செல்கிறது. தொலைக்காட்சியைப் பார்க்கின்ற மக்கள் மேலைத்தேய கலாச்சாரத்தை தாமும் பின்பற்ற முனைகின்றனர்.

உடைதொடக்கம் நடைவரை மேலத் தேயத்தை பின்னற்ற முனைகின்றார்கள். இதனால் எமது பண்பாடு சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தொலைக்காட்சியை கூடுதலான அளவு நேரம் பார்ப்பதால் கண்களுக்கு உகந்தது அல்ல என மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. அப்படி இல்லையென்று பார்ப்பவர்கள் கண் பார்வையை வெகு விரைவில் இழப்பார்கள் என டாக்டர்கள் கூறுகின்றார்கள். தொடர்ச்சியாக தொலைக்காட்சியை பார்க்கின்ற மாணவர்களது கல்விச் செயற்பாடு காணப்படுகின்றது. தொலைக் காட்சியிலே நாடகம், படம் பார்க்கும் சிறுவர்கள் மத்தியில் கொடூர சிந்தனைகள் சில வேளைகளில் உதயமாகி விடலாம். இதனால் இவர்கள் சமூகத்தைச் சீரழிக்கும் செயல்களில் ஈடுபட்டால் தொலைக்காட்சி மக்களிற்கு "தொல்லைக்காட்சியாகக்" கூட இருக்கின்றது.

எது எவ்வாறு இருப்பினும் பாலிலே தண்ணீரைக் கலந்து அன்னத்திற்குக் கொடுக்கும் போது அது தண்ணீரை அகற்றி பாலைக் குடிப்பது போல நாமும் தொலைக்காட்சியிலே பார்க்கின்ற நன்மைகளை எடுத்துக்கொண்டு தீமைகளைக் கழித்து விடுவோம். திட்டமிட்டு தொலைக்காட்சியை அளவாகப் பயன்படுத்தி நன்மை பெற வேண்டும்.விளக்கில் நெருப்பு அளவாக எரிந்தால் நன்மை. அதுவே அணைகடந்து எரிந்தால் தீ விபத்து அதேபோல தொலைக்காட்சியையும் அளவாகப்பயன் படுத்தினால் எமது வாழ்வை வளம்படுத்தும் விளக்கு இல்லையேல் மனித குலத்தை அழிக்கும் விபத்தாக மாறிவிடும். எனவே தொலைக் காட்சியை மனித குலத்திற்கு வழிகாட்டியாக ஒரு திசைமாற்றி தடைகளைத் தகர்த்து படிக்கற்களாக முன்னேறுவோமாக.

S. சிவகுமார்
மிருசுவில் வடக்கு
(சிறுவர் ஊடகத்துறைக் குழு)

**மதங்களின் ஒற்றுமை மனிதர்களில்?**

# Temple, mosque, church அனைத்தும் 6 சொற்கள்
# கோவில், மசூதி, சேர்ச் அனைத்தும் 3 சொற்கள்.
# சிவபெருமான், முகமதுநபி, யேசு - கிறிஸ்து அனைத்தும் 6 எழுத்துச் சொற்கள்.
# வேதம், குரான், பைபிள் அனைத்தும் 3 எழுத்துச் சொற்கள்.
# மதங்களுக்கிடையே இவ்வளவு ஒற்றுமை இருக்கும் போது மனிதர் களிடையே வேற்றுமைகள் ஏன்? சிந்துப்பாருங்கள்.

ஆக்கம் - ம. சுகேந்தினி

## உங்கள் சிந்தனைக்காக....


1. இனிமையான பருவம் இளமைக் காலம் தான்
2. இளமை என்பது நாம் விரும்பும் பொழுது அணிந்து கொள்ளும் ஆடை அன்று. சில ஆண்டுகள் மட்டுமே உடுத்தக்கூடியது.
3. வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளும் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பும் கொட்டியபாலும் திரும்ப பெற முடியாது அதே போல் இளமையும் மீண்டும் பெற முடியாது. இளமை ஒருபறவை அதை விட்டு விட்டால் மீண்டும் பிடிக்க முடியாது.
4. இளமை என்பது தோல் உரித்து புதுத் தோல் உண்டாக்குவது போன்றது.
5. இளமை துக்கத்துடன் தொடர்பு கொள்வதில்லை
6. இளமைக் காலத்தில் கவனமின்றித் துள்ளினால் முதுமைக் காலத்தில் வருந்த நேரிடும்.
7. இளமையில் செய்யும் தவறுகள் வாழ்க்கையில் என்றென்றும் நிலைத்து நின்று விடுகின்றன.
8. மது இல்லாமலே வெறி கொள்வது வாலிபம்.
9. அடக்கமும்அறிவுடமையும் முதுமையைத் தழுவி நிற்பது போல் முரட்டுத் தனம் இளமையைத் தழுவி நிற்கின்றது.

ஆக்கம் - உ. சங்கர் ஆனந்த்

### 10ம் பக்க பொதுஅறிவு விடைகள்

| | |
|---|---|
| 1. 15 | 2. 1948 |
| 3. 90% | 4. 70% |
| 5. 8 கோடி | 6. மார்ச் 8 |
| 7. 1990 | 8. உதயதாரகை 1841 |
| 9. 1930-1950 | 10. 1959 |

## கவிதைப்போட்டி இல.04 இற்கான கவிதைகள்



இன்று சிறுவர்கள் உரிமைகள் அனைத்தும்
இழந்த நாம் உரிமையை மீட்க பாடு
படுகின்றோம்
இன்றைய நவீன யுகத்தில் எம் வேதனையை
வெளியுலகத்திற்கு வெளிப்படுத்த நல்ல
சந்தர்பம்

அ.தனுஷா
(சிறுவர் ஊடகத்துறை குழு.)

முன்பு போரினால் நான் அடைந்த
துன்பங்கள், கஸ்டங்கள் அனைத்தும்
மறந்து
நவீன யுகத்தில் காலடி வைத்து எம்மை
புத்திசாலியாய் மாற்ற நினைக்கின்றோம்.

ம.ரிவ்தி
(சிறுவர் தொடர்பாடல் குழு.)

# யாழிலே இப்படியும் ஒரு நிலையா?

சண்டிலிப்பாய் பிரதேசத்திலே, நன்கு சிறப்பாகவும் விவசாயத்திலும் அழகிய கிராமமாக தலைசிறந்து விளங்கும் பண்டத்தரிப்பு என்னும் ஊரிலே இருபாலாரும் கல்வியைத் தொடர சிறந்ததொரு பாடசாலையாக தலைதூக்கி நிற்கும் மிகப்பெரிய பாடசாலையில் வறுமைப் புயலில் சிக்குண்டு தமது கல்வியை தொடர்வதற்காக இப்பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்கள் ஒரு சில பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றுது அரசின் புதிய கல்விச்சீர்திருத்தத்திற்கமைய கணிப்பீடு என்பது பாடசாலைகள் தோறும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். இந்த கணிப்பீட்டின்படி செயற்பாடுகளை வறுமை காரணமாக குறித்த தவணையில் ஒப்படைக்க முடியாது தவிக்கின்றனர்.

இவ்வாறு செயற்பாடுகளை குறித்த தவணையில் ஒப்படைக்காத மாணவர்களை ஆசிரியர்கள் இரும்பு மனத்துடன் பல்வேறு பட்ட நடத்தைகளில் ஈடுபடுத்துகின்றனர். இவ்வாறான ஆசிரியர்களால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மாணவர்களது மனநிலை இச்செயற்பாடுகளினால் மாற்றடைந்து தமக்கு கல்வியே வேண்டாம் என்ற முடிவெடுத்து கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றார்கள்.

இதைவிட வேறுசில பாடசாலைகளில் பாதணிகள் இன்றி வருபவர்களை தண்டிப்பதனாலும் ஒரு சில மாணவர்கள் கல்வி கற்காது தமது வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றனர். எனவே இந்நிலை யாழிலே எப்போது மாற்றமடைகின்றதோ அப்போதே மாணவர்கள் வற்புறுத்தலின்றி சுதந்திரமாக தாமே கல்வியைத் தொடர்வார்கள்

ஆக்கம் C.M.G அங்கத்தவா
சண்டிலிப்பாய்.

## பொதுஅறிவை வளர்ப்போம்

1. பாதுகாப்புச்சபையில் அங்கத்தவர் எண்ணிக்கை யாது?
2. ஐ.நாவில் மனிதஉரிமை பற்றிய சர்வதேசப் பிரகடனம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு?
3. இலங்கையில் பாடசாலை சேரும் மாணவர் வீதம்?
4. உலகில் ஏழைகளில் பெண்கள் வீதம்?
5. உலகில் பாடசாலை செல்லாத சிறுமியர்கள் தொகை?
6. சர்வதேச மகளிர் தினம்?
7. சார்க பிரகடனப்படுத்திய சிறுவர் ஆண்டு?
8. இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழ்ப் புதினப்பத்திரிகை எது?
9. ஈழகேசரி வெளிவந்த காலப் பகுதி?
10. யாழ்ப்பாணத்தில் ஈழநாடு எப்போது வெளிவர ஆரம்பித்தது?

விடைகள் ?ம் பக்கம்

ஆக்கம்-சி.யமுனாளினி
(C.M.G)

# பூவுலகமும் வான்வெளியும்



வானமும் பூமியும் ஒன்றை ஒன்று எந்த அளவில் ஒத்திருக்கின்றன? அவை இரண்டும் ஒரே வகையான விதிகளுக்கு உட்பட்டு நடந்து வருகின்றன என்பது நமக்குத் தெரியும். புவியீர்ப்பு சக்தியானது ஆப்பிள்கள் மீது பீரங்கிக் குண்டுகள் மீது எவ்வாறு செயல்பட்டு வருகின்றதோ அதே போலக் கோள்களின் மீதும் செயற்பட்டு வருகின்றது. வானமும் பூமியும் ஒரே வகையான பொருள்களால்தான் அமைந்துள்ளனவா? நட்சத்திரங்களிலும், கோள்களிலும் உள்ள தனிமங்கள் பூமியில் உள்ளவைகளைப் போன்றவை தானா? தொலைவில் உள்ள உலகங்களிற்கும் பயணம் செய்யாமல் நாம் இதற்குரிய விடைகளைத் தெரிந்து கொள்ள ஏதாவது வழி உண்டா? வானமும் வான்பொருளும் இயைந்துள்ள அமைப்பைக் கண்டுபிடிக்கத் தடை வேலியாகக் குறுக்கே நின்ற விண்வெளியை விஞ்ஞானம் தாண்டிக்குதித்து எப்படி என்னும் வரலாற்றைக் கூறுவதற்கு முன் நாம் ஐசக் நியூட்டனையும் ஸ்ட பர் பிரிட்ஜ் சந்தையில் அவர் வாங்கிய விளையாட்டுக் கருவிகளையும் நினைவுபடுத்திக்கொள்வோம். அவர் விலைக்கு வாங்கிய முப்பட்டைக் கண்ணாடியின் துணையால் சூரியனின் வெண்மையான ஒளி பல ஒளி அலைகளின் கலவை என்பதை கண்டுபிடித்தார். சூரியன் வீசிய கதிர் கற்றையை அந்த முப்பட்டைக் கண்ணாடி பன்னிறக் கதிர்களாகப் பிரித்தது. அந்நிறங்கள் அவருடைய அறையின் சுவரின் மீது ஒரு பட்டையைப் போல தோன்றின. அப்பட்டையைத்தான் நிற மாலை என்கின்றோம். இந்த நிறப்பட்டையை ஆராய்ந்தால் சூரியனின் அமைப்பைப்பற்றி பல விஷயங்கள் தெரிய வரும் என்பதைப் பற்றி நியூட்டனுக்குத் தெரியாது. ஜெர்மனியில் உள்ள ஹைடெல் பெர்க்கில் குஸ்டாப், சிர்க்காப் ரோபெர்ட்டின்சன் எனும் இரணடு இரசாயன அறிஞர்கள் 1854ஆம் ஆண்டில் கவர்ச்சி மிக்க விஷயம் ஒன்றைக் கண்டு பிடித்தார்கள். அவர்கள் தனிமங்கள் பலவற்றைத் தனித் தனியே வெப்பமுறச் செய்தார்கள். அவற்றுள் ஒவ்வொன்றும் வீசிய நிறமாலையில் அடையாளம் காணமுடிந்தது. உதாரணமாக சோடியம் இரண்ட மஞ்சள் கோடுகளாகத் தெரிந்தது. லித்தியம் ஒரு செந்நிறக் கோடாக தென்பட்டது. இவ்வாறே விஷயம் ஒவ்வொரு தினமும் தன்னைக் காட்டிக்கொடுக்கும் அடையாளத்தை அந்த ஒளி-நிறமாலையில் இட்டது. அதன் பிறகு அந்த இரண்டு இரசாயனிகளும் எந்தப் பொருள்களின் அமைப்பைப் பற்றித் தங்களுக்குத் தெரியாமல் இருந்ததோ அந்தப் பொருள்களை வெப்பமுறச் செய்து சோத்தார்கள். அவற்றின் நிறமாலையில் காணப்பட்ட ஒளியைப் பகுத்து ஆராய்ந்தார்கள். இவ்வாறு செய்து வந்ததில் ரூபிடியம், ஹீலியம் முதலிய தனிமங்களைக் கண்டு பிடித்தார்கள். இந்தச் சோதனைகள் காரணமாக அந்த இரசாயனிகளுக்கு புதுப்புது சிந்தனைகள் தோன்றத்தொடங்கின. சோதனைச் சாலைகளில் தனிமங்கள் வீசும் ஒளியைக் கொண்டு அவை இன்னின்ன தனிமங்களில் வீசும் ஒளியையே-ஏன் நட்சத்திரங்கள் வீசும் ஒளியைக்கூட அவ்வாறு ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியுமல்லவா? இவ்வாறு கூறினார் அறிஞர் கிர்க்காப். அறிஞர் கிர்க்காப் நிறமாலையைக் காட்டி (ஸ்ப்பெக்ட்டிரோஸ்கோப்) எனும் கருவியின் துணை

கொண்டு ஆராய்ச்சி நடத்த முற்பட்டார். நிறமாலை காட்டி எனும் கருவி முப்படைக்கண்ணாடியும் தொலைநோக்கியும் ஒன்றாக இணைந்த ஒரு கருவி. அந்தக் கருவியின் மூலமாக ஆய்வு நடாத்திய போது ஹைட்ரஜன், கரி(இரும்பு) குரோமியம், நிக்கல், துத்நாகம், செம்பு, பேரியம், சோடியம, கல்சியம் என்னும் தனிமங்கள் எல்லாம் சூரியனிலும் இருக்கின்றன என்பதை கிர்க்காப் கண்டுபிடித்தார்.


பூமியில் காணப்படும தனிமங்கள் தான் சூரியனிலும் உள்ளன என்ற உண்மை அவர் ஆராய்ச்சியின் மூலமாகத் தெரிய வந்தது.தொடர்ந்து அந்த அறிஞர் சூரியனின் நிறமாலையை ஆராய்ச்சி செய்து வந்தபோது எதிர் பாராத நிகழ்ச்சி ஒன்று நேர்ந்தது. அதன் மூலம் புதிய செய்தி ஒன்று தெரிய வந்தது. சூரியனின் நிறமாலையில் தோன்றிய கோடு ஒன்று நமக்குப் பூமியில் எந்தத் தனிமத்துடனும் தொடர்புடையதாகத் தெரியவில்லை. அது சூரியனைத் தவிர வேறு எதிலும் இருப்பதாகத் தெரியவில்லை ஆதலால் அதற்கு ஹீலியம் என்று பெயர் சூட்டப்பட்டது சூரியனைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லை அடிப்படையாகக் கொண்டு அந்தப் பெயர் சூட்டப்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பிறகு மற்றோர் எதிர்பாராத செய்தி வந்தது, டெக்ஸாஸ், கான்ஸில் என்னும் அமெரிக்கா மாநிலங்களில் உள்ள எண்ணெய்ச் சுரங்கப் பிரதேசத்தில் நமது பூமியிலே ஹீலியம் என்ற அந்தப் பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

நிறமாலை காட்டியின் மூலமாக ஒவ்வொரு நட்சத்திரமாகச் சோதித்துப் பார்த்தார்கள் அந்தக் கருவியை வானத்தில் எந்தத் திசையை நோக்கித் திருப்பினாலும் நமது பூமியை படைத்த அடிப்படைப் பொருட்களாக உள்ள தனிமங்களே அந்தக் கருவியின் மூலமாக அவற்றிலும் இருப்பது தெரியவந்தது. நமது பூமியில் உள்ளவையும், நமக்குத் தெரிந்தவையுமான பொருட்களின் ஒளியாலேயே சூரியனும் நட்சத்திரங்களும் ஒளி வீசிப்பிரகாசிக்கின்றன. ஆதலால் இரசாயன முறையில் பார்க்கும் போது பிரபஞ்சம் முழுவதிலும் ஒரே குடும்பமாக உள்ளது.

நிறமாலை காட்டியின் மூலமாக நட்சத்திரங்களை ஆராய்ந்து பார்த்தால் அவையெல்லாம் ஏறத்தாழ 80 சதவிகிதம் ஹைட்ரஜனாலும் 15 சதவிகிதம் ஹீலியத்தாலும் அமைந்திருப்பது தெரிகின்றது. அவற்றின் பொருண்மையில் மீதமுள்ள பகுதியில் உள்ள மற்றெல்லாத்தனிமங்களும் அடங்கியிருக்கின்றன. நட்சத்திரங்களில் என்னென்ன பொருட்கள் உள்ளன என்பதை மட்டும் நிறமாலை காட்டிவிடுவதோடு அமையவில்லை. அவற்றின் அளவு அவை செல்லும் திசை, வேகம் ஆகியவற்றையும் அவற்றின் வயதையுங்கூட அது தெரிவிக்கின்றது. டாப்பிலர் விளைவு என்பதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? 1842ஆம் ஆண்டில் கிறிஸ்டியன் டாப்பிலர் என்னும் ஆஸ்திரிய நாட்டுக் கணித விற்பன்னர் ஓர் அரிய நிகழ்ச்சியினைக் கண்டார். ஏதாவது ஓர் ஒலி நம்மை நோக்கி வரும்போது அதன் சுருதி உயர்வது போலத் தோன்றுகிறது. அது நம்மைவிட்டு அப்பால் செல்லும்போது அதன் சுருதி தாழ்ந்து போகின்றது. ஓர் ஒலியின் சுருதியில் ஏற்படும் மாறுதலைக் கொண்டு அவ்வொலியை இயற்றும் பொருள் எதுவானாலும் அது என்ன வேகத்தில் இயங்குகிறது என்பதைக் கண்டுபிடித்து விடமுடியும் ஒலியின் விஷயத்தில் டாப்பிலர் விளைவு செயற்படுவதைப் போலவே ஒளியின் விஷயத்திலும் அது செயற்படுகின்றது. ஏதாவதொரு நட்சத்திரம் பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம் அப்போது அந்த நட்சத்திரத்திலிருந்து ஒவ்வொரு நொடியிலும் வரும் ஒளியின் அலைகள் மிகுந்து வருகின்றன.

**மிகுதி அடுத்த இதழில் தொடரும்......**

# கலிலியோ (GALILEO)




கலிலியோ 1564-1642 காலப்பகுதிகளில் வாழ்ந்த இத்தாலி நாட்டைச்சார்ந்த வானியல் அறிஞரும் பௌதீகவியல் அறிஞரும் கணித அறிஞருமாவார், ஊசல் தத்துவம், தொலைகாட்டி, கடிகாரம், நீர்த்துக்குத் தராசு, பென்டுலம் உபயோகிக்கும் முறை, உஷ்ணமானி, ஒளியின்வேகம் என்பவையே இவருடைய அரும் பெரும் கண்டு பிடிப்புக்களாகும். இதனோடு இவர் எழுதிய நூல்களில் மிகவும் பிரதான நூல்களாக 1632 ல் இரண்டு பிரதான உலகங்களின் சம்பாசனை, 1636 ல் நவீன விஞ்ஞன சம்பாசனை என்பன கொள்ளப்படுகின்றது.

இவர் விஞ்ஞானத் துறைக்கு பல்வேறு பங்களிப்புக்களை ஆற்றியதன் மூலம் வளாந்துவரும் விங்ஞான அறிவியலுக்கு வித்திட்ட அறிஞர்களில் ஒருவராகக் கொள்ளப்படுகின்றார். விஞ்ஞான அறிவுக்கான கருவிகளைக் கண்டுபிடித்தார். கொப்பனிக்கலின் சூரிய மையக் கொள்கையை ஏற்று தொலமியினால் முன்வைக்கப்பட்ட புவிமையக் கொள்கையை பொய்ப்பித்தார். வானியல் ஆய்வுகளிலே சந்திரனில் உள்ள மலைகளையும், குழிகளையும் தொலைக் காட்சியினூடாக (இதுவும் இவருடைய புலமையே) கண்டறிந்தார் வியாழனில் உள்ள பெரிய நான்கு உபகோள்களை கண்டறிந்தார். இதுமாத்திரமின்றி சூரியனிலுள்ள கரும்புள்ளிகளையும், பால்வெளி மண்டலத்திலுள்ள உடுத் தொகுதியையும், வெள்ளி கிரகம் விரிந்து சுருங்குவதையும் சூரியனைச் சுற்றி சுழல்வதையும் அவதானித்தார்.

கலிலியோ விஞ்ஞான முறையியலுக்கும் பல்வேறு வழிகளில் பங்காற்றியிருக்கின்றார். விஞ்ஞான உளப்பாங்கு என்பதை பொறுத்தவரை உள்ளதை உள்ளவாறு கூறுதலாகும். அந்த விஞ்ஞான உளப்பாங்கு இவரது ஆய்வுகளிலே துல்லியமாக வெளிப்பட்டிருப்பதை நாம் அறிந்திருக் கின்றோம். கணித பரிசோதனை முறைகளில் ஒன்றான உய்த்தறி முறையை விஞ்ஞானத்தில் கையாண்டார். கருவிகள் மூலம் அவதான முறையை பிரபல்யப் படுத்தினார். "நோக்கலும் பரிசோதனையுமே உண்மையான நியாயித்தல் முறை" என கூறினார் இவரால் முன்வைக்கப்பட்ட விதியே வீழும் பொருள் விதியாகும். "சுதந்திரமாக விழும் எல்லாப் பொருட்களும் பூமியின் மேற்பரப்புக்களுக்கு இவ் நிலையான வேகத்தை கொண்டிருக்கும்" என்பதே கலிலியோவின் விதி எனப்படும்.

இவரது ஊசல் தத்துவம் நட்சத்திரங்களின் அசைவினை அளப்பதற்கும், கடிகாரத்தின் நேரச்செயற்பாட்டினை நிர்ணயிற்பதற்கும் உதவுகிறது. இவர் சில கண்டுபிடிப்புக் களாலும் கருத்துக்களாலும் சிறைக்கு செல்லவேண்டியேற்பட்டது. தொலமியின் புவிமையக் கொள்கையை மறுத்தமையால் இவரை போப்பாண்டவர் என்பவர் அழைத்து மதத்துக்கு மாறான கருத்துக்களை வெளியிடக்கூடாது என தண்டித்தார். ஆயினும் விஞ்ஞான புரட்சியின் எழுகைக்கு இவருடைய வாழ்வையே அர்ப்பணித்தார். இதனூடாக வானியலின் புதுப்பகுதியை ஆரம்பித்தார். இவர் இதனால் பௌதீகத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்.

தேடல்
கி. கலைச்செல்வன்




# வீதியால் நடந்து செல்லும் போது

## புவர்கள் கவனிக்க வேண்டியவை.......

வீதியாற் செல்லும் போது வலது பக்கமாக நடந்து செல்ல வேண்டும்

2) வீதியைக் கடக்க வேண்டி ஏற்படின் பாதசாரி கடவையில் நின்று வீதியால் வரும் வாகனங்கள் இல்லாத நேரம் கடக்கலாம். அவசரமாகக் கடக்க வேண்டி ஏற்படின் வரும் வாகனத்தை கையால் மறித்து சாரதிக்கு சைகை காட்டிவிட்டு கடக்கலாம்.

3) வீதியால் நாம் வலதுபக்கமாகச் சென்ற போதும் எமக்கு எதிரே வரும் வாகனங்கள்அசாதாரணமான முறையில் வந்தால் நாம் ஒதுங்கி நிற்க வேண்டும்.

4) வாகன சமிக்கைகளை கவனித்து செல்லவேண்டும் வாகனம் ஒலி எழுப்பியவாறு வேகமாக வரும்போது அதற்கு இடம் கொடுக்க வேண்டும்

5) பாதையின் ஓரமாக செல்ல வேண்டும் நடுவழியாக செல்லக்கூடாது.

6) வீதியில் எமக்குத் தெரியாத அல்லது சந்தேகப்படும் பொருட்கள் காணப்பட்டால் மிதிக்கக்கூடாது. வழுக்கி விழுத்தும் பொருட்கள் காணப்பட்டால் அதை தூக்கி ஓரமாகப்போட்டுவிட்டு செல்லவும். ஏனெனில் விழிப்புலனற்றவர்களின் பயணத்திற்கு இடையூறாகாது.

7) வீதியால் செல்லும்வரை பராக்குப் பார்த்தல்,விளையாடுதல் போன்றவற்றில் ஈடுபடக்கூடாது.

ஆக்கம் - ச. வேதராணி
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

---

3ம் பக்க தொடர்ச்சி..


சிறுவர்களின் கல்விக் கூடமான பாடசாலைகளை ஆக்கிரமித்துள்ளமை, எல்லாம் சிறுவர் உயிர்வாழ்தலில் தடையாகவுள்ளன.

இலங்கையில் எத்தனையோ அப்பாவி சிறுமியர்கள் பாலியல் துஸ்பிரயோகங் களிற்கு உட்படுத்தப் பட்டிருக்கிறார்கள. இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருக்கும் சிறுவர் அமைப்புகளிற்கு இவற்றை வெளி உலகிற்கு தெரியப்படுத்த முடியாத நிலை. எனவே சிறுவர்களின் கருத்துகளிற்கு மதிப்பளித்தும் அவர்களை பிற நிகழ்ச்சிகளில் பங்குபற்றச் செய்யவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இலங்கை அரசாங்கம் முனவர வேண்டும் அததோடு இததகைய பிரச்சனைகளை தீாகக நடவடிக்கை எடுகக வேண்டும

தி.நவரட்ணம
சிறுவா ஊடகததுறை குழு
யாழ்பபாணம

# இந்தநிலை மாறுமா?

ஆக்கம் - சி.தர்சிகா. அ.நளாயினி



பாடசாலை சமூகம்

1. அதிபர் -சண்முகசாதன்
2. ஆசிரியர் -பிரபு
3. மாணவர்கள் -வறிய குடும்பத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள்

காட்சி - 1

மாணவர்கள் : குட்மோனிங் சேர்

(பிரபு)ஆசிரியர் : குட்மோனிங் பிள்ளைகள் என்னமாதிரி. நேற்று தந்த வீட்டு வேலைகள் எல்லாம் செய்து விட்டீர்களா?

மாணவர்கள் : ஆம் சேர்

ஆசிரியர் : என்ன சோமு சத்தமில்லாமல் மௌனமாய் இருக்கிறீர்?

சோமு : சேர் எனக்கு கொப்பி முடிஞ்சுது அதனால நான் செய்யவில்லை (இவ்வாறு கூறி சோமு அழத் தொடங்கினான்)

ஆசிரியர் : சோமு! அதற்கேன் அழுகிறீர் இங்க வாரும் அப்பா என்ன வேலை

சோமு : சேர் எனக்கு இரண்டு வயதாக இருக்கும் போது எனது அப்பா இறந்துவிட்டார். எங்கட அம்மா கூலிக்குசென்று தான் உழைக்கிறவா

ஆசிரியர் : தம்பி சோமு நான் கொப்பி வாங்க காசு தாறன் நாளைக்கு வாங்கி Home - work செய்யவேணும்

சோமு : சேர் உங்கட உதவிக்கு எனது நன்றிகள். நான் நாளைக்கு கட்டாயம் வீட்டு வேலை செய்து வருவேன் (இவ்வாறு நிலமை இருக்கையில்)

மாணவி : சேர் உங்களை principal கூப்பிடுகிறார்

அதிபர் : பிரபு சேர் இந்த பிள்ளை வன்னியில் இருந்து வந்ததாம் மிகவும் கஷ்டமாம். அதனால் நான் 5000/= தான் டொனேசனாக கேட்டேன். இல்லையென்று பெற்றோர் அடம்பிடிக்கிறார்கள் என்ன செய்வம்

ஆசிரியர் : Sir அப்ப காசு வாங்காம விடுவம் ஆனால் ஒரு கொன்டிசன் போடுவம்

அதிபர் : என்ன கொன்டிசன்

ஆசிரியர் : பிள்ளை ஒவ்வொரு நாளும் சப்பாத்து போடவேணும். அத்துடன் ஸ்கூலுக்கு வேளைக்கு வரவேணும்

பெற்றோர் : ஐயோ! சேர் எங்கநிலை மிகவும் கஷ்டமானது. ஆகவே சப்பாத்துக்கு 3 மாதகால தவணை தாருங்கோ

ஆசிரியர் : அப்பசரி 3மாதத்தால shoes போடவேணும் சரி தானே (இவ்வாறு நிபந்தனை அடிப்படையில் பிள்ளையை Principal பாடசாலைக்கு அனுமதித்தார்)

## காட்சி 2

மாணவர்கள் : குட் மோனிங் சேர்.

ஆசிரியர் : குட் மோனிங் சில்றன்ஸ் பிள்ளைகள் நாளைக்கு நீங்கள் எல்லோரும் Fasilite fees 50/= கொண்டு வரவேணும் நாளைக்கு கொண்டு வராவிட்டால் Principal கிட்ட அனுப்புவன்

**மறுநாள்................**

மாணவர்கள் : குட்மோனிங் சேர்

ஆசிரியர் : குட்மோனிங். காசு கொண்டு வந்தவர்கள் கொண்டுவாங்கோ (பிள்ளைகள்) நான் முந்தி, நீ பிந்தி என அடிபட்டனர். காசுகட்டி முடிந்ததும் எல்லோரும் தமது இடங்களில் இருந்தனர்.

ஆசிரியர் : என்ன பிள்ளைகள் யாராவது வரவில்லையா? 38 பேர்தானே காசு கொண்டு வந்திருக்கிறீர்கள். மற்ற 2 பேரும் எங்கே? (சோமுவும் கபிலனும் பயத்துடன் நடுங்கிய வண்ணம் வந்தனர்)

சோமு : சேர் அம்மா சொன்னவ நாளைக்குத்தான் தருவாவாம்.

ஆசிரியர் : அப்ப கபிலன் எங்கே காசு? சப்பாத்தும் இல்லை. டொனேசனும் கட்டேலை. அப்ப fasilite fee கட்டாட்டி என்னமாதிரி?

கபிலன் : என்ன சேர் செய்யிறது? அப்பாவுக்கும் மிதிவெடி பட்டு கால் இல்லை அம்மாவும் நோய்க்காரி. அண்ணாதான் உழைக்கிறது. அண்ணா காசு இல்லை என கூறிவிட்டார்.

ஆசிரியர் : என்னாலை ஒன்றும் செய்யமுடியாது. சோமு இந்தாங்கோ காசு நீங்க கட்டுங்கோ. கபிலனை அதிபரிடம் அனுப்பத்தான் வேனும்

ஆசிரியர் : மொனிற்றர்.

மொனிற்றர் : என்ன செய்யிறது சேர்.

ஆசிரியர் : கபிலனைக் கொண்டு போய் அதிபரிடம் விடுங்கோ

கபிலன் : சேர், நான் நாளைக்கு எப்படியோ கொண்டு வருவேன். என்னை மன்னியுங்கோ

ஆசிரியர் : என்னத்தை மன்னிக்கிறது. நீ போயே ஆகவேண்டும்.

கபிலன் : ஏன் சேர்,அவருக்கு காசு கொடுக்கிறீர்கள் எனக்கும் போட்டுக் கொடுங்கோ நாளைக்கு நான் கொண்டு வாறன்.

ஆசிரியர் : என்னாலை முடியாது நீ போ

மொனிற்றர் : எஸ்.கீயூஸ்.மீ சேர், கபிலன் "பசலட்டீஸ் பீஸ்" கொண்டு வரவில்லையாம் எங்கட சேர் உங்களிடம் அனுப்பி விட்டவர்.

அதிபர் : என்ன தம்பி நீ டொனேசனோ சப்பாத்தோ இல்லை என்று கூட விட்டனான் இதுக்கு நான் என்ன செய்யிறது? பியோன், "கம் கியர்"

பியோன் : என்ன சேர்?

அதிபர் : எங்கே அந்த தடியை எடு

சியோன் இங்கை இருக்கு சேர்.

(அதிபர் கபிலனுக்கு மிகவும் கடுமையாக அடித்ததால் காலில் காயம் ஏற்பட்டு கபிலன் விக்கி, விக்கி அழுகின்றான்.)

அதிபர் : நான் சேட்டிபிக்கேற் தாறன். நீ வேற பாடசாலையில் படி என்னாலை ஒன்றும் செய்யேலாது நாளைக்கு வந்து சேட்டிபிக்கேற்றை கொண்டு போ

கபிலன் அழுது கொண்டு வீடு நோக்கி புறப்பட்டான். வீதியில் எல்லோரும் கபிலனை கேலி செய்தனர். கபிலன் பாடசாலையை விட்டு நீக்கப்பட்டதால் படிக்க முடியாமல் வீட்டில் இருந்தான்.

யாழ் மாவட்டத்தில் சம காலத்தில் ஒருசில பாடசாலைகளில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதனால் சிறார்களின் கல்வி உரிமை பாதிக்கப்படுகின்றது. இந்நிலையை மாற்ற சமூகத்தில் உள்ள பெரியோர்கள் முன் வருவார்களா?

# போதையும் அதனைத் தடுக்கும் நாளைய தலைவர்களின் இன்றைய குரல்கள்

போதையில் மூழ்கிய சிறுவர்களுக்காக இன்றே குரல் கொடுக்கின்றார்கள் நாளைய தலைவரும இன்றைய இளம் சமுதாயமும் போதை பற்றி வண்ணமொழிகள் சின்னம் சிறுவரின் மனதிலே தவழுகின்றன.

மண்ணில் பிறந்தவன் விண்ணை நோக்கி விரைந்துவிட்டான் புதிய யுகவளர்ச்சியிலே. போதையின் வளர்ச்சியை தடுப்பதற்கா எத்தனை கோடி அறிவுறுத்தல்கள், பிரசங்கங்கள் உலகை வலம் வருகையில் நாளுக்கு நாள் அதிகளவில் ஆயிரம் சிறார்களை குடித்துக் கொண்டே இருக்கின்றது.

கசிப்பு உற்பத்தியிலே கட்டிவிடப்பட்ட சிறுவர்களை அவிட்டுவிடுங்கள் கல்வியைக் கண்ணெனக்கொண்ட சிறுவர்களை போதையில் இறக்கியது கவலைக்குரிய விடயமண்றோ. பெற்றோர்களே, பெரியோர்களே தாழ்ந்து வணங்கி நற்மனப்பாங்குடன் உங்களிடம் வேண்டுவது சிறுபிள்ளைகளை மனத்தாக்கத்துக்கு உட்படுத்தி இரககவோ அல்லது போதையில் ஈடுபடுத்தி வாழ்வை மனைாக்காதீர்கள் வாழ்க்கை என்பது சிறிது ஆனால் அதனில் ஏற்படும் விளைவுகள் பெரிது இன்றைய உலகை ஆட்டிப்படைக்கும் விடயங்கள் இரண்டு ஒன்று போதை மற்றையது சாஸ்ஸ் போதையென்னும் போலியால் போதையாக்கி வைக்கிறான் இந்த மனிதன் வாழ்வில் என்பந்றும் நிகழ்விலே இதை நினைத்து வடாதீர்கள் எம் சிறுவர்களே நம் தாய் நாட்டின் சத்தியத்துடன் போதையை ஒழிப்போம் விழிப்புணர்வு ஏற்படுத்துவோம். இன்றே திரளுங்கள் சிறுவர்களே.

ஜெ.செந்தில்செல்வன்
C.M.G

# Global Warming

## What is global warming?



Global warming is the rise in temperature of the earth's atmosphhere. It is said that by the time a baby born today, is 80 years old, the world will be six and a half degrees warmer than it is now.

## Is global warming bad?

The earth is naturally warmed by rays(or radiation) from the sun, Which pass through the earth's atmosphere and are reflected back out to space again .




The atmosphere is made up of layers of gases, some of which are called "greenhouse gases". They are mostly natural and make up a kind of themal blanket over the earth. This lets some of the rays back out of the atmosphere, keeping the earth at the right temperature for animals, plants and humans to survive.($60^0$ F/$16^0$C)

So some global warming is good. But if extra greenhouse gases are made, the thermal blanket gets thicker and too much heat is kept in the earth's atmosphere. That's when global warming is bad.


## What are the greenhouse gases Produced?

Greenhouse gases are made out of :

**Water vapour**
**Carbon dioxide**
**Methane**
**Nitrous oxide**
**Ozone**
**Chloroflurocarbons(CFCs)**

They are all natural gases, but extra greenhouse gases can be made by humans frome pollution.

## How are extra greenhouse gases produced?



Extra greenhouse gases are produced through activities whichrelease carbon dioxide, methane,nitrous oxide and ozone CFCs(chlorofluorocarbons). These activities include:


Burning coal and petrol, known as "fossilfuels" , Cutting down of rainforests and other forests , Animal waste which lets off methane

## what"s the "ozone layer" got to do with it?



The ozone layer is another important part of the atmosphere. It's made up of ozone (a type of oxygen) that protects the earth from too many harmful rays called UVB.

**So what could happen?**



If Earth gets hotter , some of the important changes couldhappen. Water expands when it is heated and oceans absorb more heat than land, so sea levels whould also rise. Sea levels whould also rise due to the melting point of the glaciers and sea ice.
Cities on cocsts whould flood.
Places that usually get lost of rain and snowfall might get hotter and drier.
Lakes and rivers could dry up.
There whould be more droughts making it hard to grow crops.
Less water whould be available for drinking.
Showers and swimming pools.
Some plants and animals might become

to be Continued.

## ஓசையில்லா கண்ணீர்கள்

நினைவுகளின் தடா...
மனங்களில் பதி... வயதில்
தாலாட்டிய உறவு
ஏங்கித் தவிக்கையில்
கிடைக்கவில்லை - எங்களுக்கு
கண்களில் கனிவும்
வார்த்தையில் பரிவும்கொள்ளும்
சொந்தங்கள் - எங்கள்
பிஞ்சு மனங்களிற்கு வாய்க்கவில்லை
பள்ளி செல்லும் தளிர்கள் - நாம்
பாலைவனத்தில் அகப்பட்டுக் கொண்டோம்
பென்சில் பிடிக்கப் பழகும் வயதில்
எடுபிடி ஆகிப்போன சிறுவர்கள் - நாம்
அன்பு வார்த்தைகள் புரியாத
மொழியாகிப்போக
வன்சொற்கள் பழகிப் போகின
தீண்டலும் பயங்களும் வாழ்க்கையாக
வெஞ்சொற்களும் வெளிக்காயங்களும்
இன்றும் வலிகளாய்த் தொடர்கின்றன
இயற்றிய சட்டங்களும், நீதிகளும்
மொட்டாகி கருகிப்போன - எம்
கண்ணீருக்கு விடுதலை தருமா?
மதிகெட்ட மாந்தர்களை - பூண்டோடு
ஒழித்திட சிறுவர்களாய் இப்பூமியில்
புதியதொரு உலகம் படைப்போம்.

சி.பிரசாந்தி
சிறுவர் ஊடகத்துறை குழு
யாழ்ப்பாணம்.



# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 2

அன்பார்ந்த சிறுவர்களே! இதனைச் சரியான முறையிற் பூர்த்திசெய்து எதிர்வரும் 2003.08.15 ஆந் திகதிக்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்குஅனுப்பிவைக்கவும். சரியாக நிரப்பி அனுப்பியவர்களில், சீட்டுக்குலுக்கல் மூலம் தெரிவு செயயப்படும் மூவரின் பெயர்கள் அடுத்த மாதச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

**அனுப்பவேண்டிய முகவரி....**

ஆசிரியர்,
"துளிர்"
குறுக்கெழுத்துப்
போட்டி இல.02,
18,குமாரசாமி வீதி,
கந்தர்மடம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | |
| 6 | | | ■ | 7 | | 8 | ■ |
| | ■ | 9 | 10 | | | | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| ■ | | ■ | 14 | 15 | | ■ | 16 |
| 17 | | 18 | ■ | | ■ | 19 | |
| 20 | | | | | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

### இடமிருந்து வலம்

1. இந்த வலையங்களால்தான் இப்பிரச்சினையே
5. காயம்
6. வேகம்
7. ஐம்புலன் அடக்கி ஒரு மனதாக இரு
9. இல்லாமல் ஒழித்தல் பிளத்தல்
11. மகள்
13. ஓர் ஆசைச் சொல் தங்களை தங்களுடையதாக குறிக்கும்.
14. பெண்
17. கூட
19. கழித்தல் குறி
20. வயலின் கட்டப்படுவது எல்லையில் இருக்கும்.
21. கையில் பத்து காலில்பத்து
22. பூட்டான் தலைநகர்
23. பிடித்த பிடிக்கு இது பெயர் பெற்றது.

### மேலிருந்து கீழ்

1. உபயோகிப்பது
2. பெரியவர் / மேலானவர் என்று பொருள்
3. சுமத்தல்.
4. வினா
5. தூய்மை / பரிசுத்தம்
8. கட்டுதல்/பாடல் புனைதல்
10. பாடல்
12. நரி இதில் தேர்ந்தது
15. தாளக்கட்டு
16. தன்மை
17. அவசரத்துடன் கூடிய பதற்றம்
18. தடி / பொல்லு .
19. மாலை
21. பிடியைத் தளர்த்து

போட்டி 01 இல் வெற்றி பெற்றவர்களின் விபரம் அடுத்த இதழில் எதிர் பாருங்கள்.

அன்புள்ள அனைவருக்கும்,

இவ்விதழ் தொடர்பான கருத்துக்களினையும், விமர்சனங்களினையும்,

துளிர் சஞ்சிகைக்கான ஆக்கங்களினையும்,

சிறுவர் ஊடகத்துறை குழுவுடன் இணைந்து செயற்பட எண்ணுபவர்களும்




தொடர்பு கொள்வதற்கான எமது முகவரி

"துளிர்" சஞ்சிகை
வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்,
இல.18, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

Book Designed by
mOuse

# ஓவியம் பேசுகின்றது.

## இல.05

படத்தினை உற்று நோக்குங்கள் சிந்தனைகளை நான்கு வரிக்குள் அழகாக கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள் சிறந்த கவிதைகள் எமது அடுத்த இதழில் பிரசுரமாகும்.

ஆக்கங்கள் வந்து சேரவேண்டிய
இறுதித்திகதி
15.08.2003.
அனுப்ப வேண்டிய முகவரி

"துளிர் சஞ்சிகை"
வட இலங்கைப்பத்திரிகையாளர் சங்கம்



அனுசரணை:
சிறுவர் பாதுகாப்பு,
146, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

வட இலங்கைப்பத்திரிகையாளர் சங்கம்,
18, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.